பக்கங்கள்: 06

# தீம்புனல்
THEEMPUNAL

மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com தீ : 01 புனல்:14 17.11.2023 வெள்ளிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2053

# மஹிந்த சகோதரர்களின் ஓய்வூதியம் நிறுத்தப்பட வேண்டும்

மஹிந்த ராஜபக்ஷ, கோட்டபாய ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ உள்ளிட்டோர் முன்னர் வகித்த பதவிகளுக்காக வழங்கப்படும் ஓய்வூதியம் நிறுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்து ஜனாதிபதியின் செயலாளரிடம் கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது. உத்தியோகபூர்வ இல்லம், வாகனம், பாதுகாப்பு உள்ளிட்ட ஏனைய சலுகைகளும் நீக்கப்பட வேண்டும் என்றும் அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.



இலங்கையை திவாலாக்கியவர்கள் தொடர்பில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கமைய, இதற்கு காரணமானவர்களின் குடி உரிமைகள் இரத்து செய்யப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் வெலிகம தொகுதியின் பிரதம அமைப்பாளர் ரெஹான் ஜயவிக்ரம தனது சமூக வலைத்தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து கட்சிகளும் எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து இந்த நடவடிக்கைகளுக்காக பாராளுமன்றத்தில் ஒரு பிரேரணையை கொண்டு வரவேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் பொருளாதார திவால்நிலை குறித்து தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை பரிசீலித்த உச்ச நீதிமன்றம், முன்னாள் ஜனாதிபதிகள் மஹிந்த ராஜபக்ஷ, கோட்டபாய ராஜபக்ஷ, முன்னாள் நிதிய மைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட ஏழு பேரை பொறுப்பேற்க வேண்டும் என தீர்ப்பளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கோப் குழுக் கூட்டங்கள் இடைநிறுத்தம்

கோப் குழுக்கூட்டங்கள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது தற்போதைய பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டதன் பின்னர் குழுக் கூட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என சபாநாயகர் தெரிவித்தார்.

# சுகாதார சீர்கேடு உணவகங்களுக்கு பூட்டு

யாழ்ப்பாணத்தில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய நான்கு உணவகங்கள் பொது சுகாதார பரிசோதகர் குழுவினால் சீல் வைக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாநகர சபையின் வண்ணார்பண்ணை பகுதி பொது சுகாதார பரிசோதகர் தி.கிருபன் தலைமையிலான குழுவினரால் கே.கே.எஸ் வீதி, இராமநாதன் வீதியில் உள்ள உணவகங்கள், பேக்கரி என்பனவற்றின் மீது திடீர் பரிசோதனை மேற்கொண்டனர். ஏற்கெனவே பல தடவைகள் உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட நிலையிலும் 03 உணவகங்கள், ஓர் பேக்கரி என்பன சுகாதார சீர்கேட்டுடன் இயங்கியதைக் கண்டுபிடித்தனர்.

இதனையடுத்து 03 உணவகங்கள், பேக்கரி என்பவற்றிற்கு எதிராக மேலதிக நீதவான் நீதிமன்றில் தனித்தனியே வழக்குகள் பொது சுகாதார பரிசோதகரால் தாக்கல் செய்யப்பட்டது. வழக்குகளை விசாரித்த மேலதிக நீதவான் சுகாதார சீர்கேடுகள் திருத்தம் செய்யும் வரை 04 உணவு கையாளும் நிலையங்களையும் சீல் வைத்து மூடுமாறு பொது சுகாதார பரிசோதகரிற்கு கட்டளையிட்டார்.

அத்துடன் வழக்குகளை மேலதிக விசாரணைகளிற்காக டிசம்பர் மாதத்திற்கு ஒத்திவைத்தார். இதனைத் தொடர்ந்து 04 உணவு கையாளும் நிலையங்களும் பொது சுகாதார பரிசோதகரால் சீல் வைத்து மூடப்பட்டன.



# யாழ்.மாவட்டத்தில் அதிக புள்ளி பெற்ற மாணவி

யாழ்ப்பாண இந்து மகளிர் கல்லூரிஆரம்பப் பிரிவைச் சேர்ந்த ஜெராட் அமல்ராஜ் வனிஷ்கா என்ற மாணவி 2023 ஆம் ஆண்டு ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 196 புள்ளிகளைப் பெற்று யாழ்.மாவட்டத்தில் அதிக புள்ளியினைப் பெற்று வரலாற்றில் முதற் தடவையாக யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளதாக பாடசாலை அதிபர் சிவந்தினி வாகீசன் தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு எமது கல்லூரியிலிருந்து 110 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றினர். 35 மாணவர்கள் பரீட்சையில் சித்தி அடைந்து கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.



# சென்னையில் இலங்கை வர்த்தகர் கடத்தல்

சென்னை பாரிமுனையில் பணத் தகராறில் இலங்கை வர்த்தகரான முகம்மது ஷியாம் என்பவரைக்கடத்திய சந்தேகத்தின் பேரில் ஒரு பெண் உட்பட 4 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாரிமுனையில் உள்ள விடுதியில் தங்கியிருந்த அவரை கடத்திய இலங்கையில் இருக்கும் அவரது மகளுடன் தொடர்புகொண்டு முகம்மது ஷியாமை விடுவிக்க 15 லட்சம் ரூபாய் தருமாறு மிரட்டியுள்ளது. வடக்கு கடற்கரை பொலிஸ் நிலையத்தில் இணையம் மூலமாக மகள் முறைப்பாடளித்தார். நான்கு பேரையும் வியாழக்கிழமை கைது செய்த பொலிஸார் வர்த்தகரை மீட்டனட.

வியாழக்கிழமை கைது செய்து, முகம்மது ஷியாமை மீட்டனர்.

கைது செய்யப்பட்ட சித்ராவிடம் முகம்மது ஷியாம் கடன் வாங்கியிருப்பதும் வாங்கிய கடனைத் திருப்பி அளிக்காததால் சித்ரா கடத்தலில் ஈடுபட்டதும் தெரியவந்தது. இது தொடர்பாக பொலிஸார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

# ராஜபக்ஷக்கள் மட்டும் குற்றவாளிகள் அல்ல

## அகிலவிராஜ் காரியவசம்

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சிக்கு ராஜபக்ஷ மாத்திரம் குற்றவாளிகள் அல்ல என ஐக்கிய தேசியக் கட்சியின் உதவித் தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கோட்டபாய ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் பலர் பொறுப்பு என உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை யாரும் வீணடிக்க வேண்டாம் என அகிலவிராஜ் காரியவசம் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

“பொருளாதார நெருக்க



டிக்குக் காரணமானவர்கள் ஏனையவர்கள் இருப்பதால் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் ஒருவர் விளக்கங்களைக் கொண்டு வரக்கூடாது. பொருளாதார நெருக்கடிக்கு ஓரளவு பொறுப்பானவர்கள் ஏனைய அரசாங்கங்களில் உள்ளனர். எனவே, சமீபத்திய தீர்ப்பின் அடிப்படையில் விளக்கம் அளிக்க முயற்சிக்கக் கூடாது,” என்றார்.




# நல்லூரில் திருடியவர் கைது

நல்லூர் ஆலய வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியில் பற்றியை திருடிய காரைநகர் வாசி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கந்தசஷ்டி விரத தினத்தை முன்னிட்டு நல்லூர் கந்தசாமி ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றது. நல்லூர் ஆலயத்திற்கு பெருமளவில் பக்தர்கள் வருகின்றனர்.

கைது செய்யப்பட்டவர் காரைநகரைச் சேர்ந்தவர் எனவும் நீண்ட காலமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு நூதனமான திருட்டுகளில் ஈடுபட்டு வருபவர் எனவும் யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

# காஸா மருத்துவமனையில் 2,300 நோயாளிகள் பரிதவிப்பு

காஸா அல்-ஷிபா மருத்துவமனை வளாகத்துக்குள் இஸ்ரேல் இராணுவத்தினர் பீரங்கி வாகனங்களுடன் முற்றுகையிட்டுள்ளனர். இதனால் இங்கு சிகிச்சை பெறும் மற்றும் தஞ்சம் அடைந்துள்ள குழந்தைகள் உட்பட நோயாளிகள் அனைவரும் பீதியடைந்துள்ளனர். இங்கு 2,300 நோயாளிகள் மற்றும் ஊழியர்கள் உள்ளனர். இவர்களை வேறு இடங்களுக்கு மாற்றும் வசதிகளில்லை. இந்த மருத்துவமனையில் இன்குபேட்டர் செயல்படாததால் ஏற்கெனவே 3 குழந்தைகள் இறந்து விட்டனர். இன்குபேட்டர்களை வழங்க இஸ்ரேல் முன்வந்தும் பலனில்லை.

எரிபொருள் இல்லாததால் ஜெனரேட்டர்கள் செயல்படவில்லை. இங்கு ஆப்ரேஷன்கள் எல்லாம் மயக்க மருந்து வசதியின்றி நடைபெறுகின்றன. இங்குள்ளவர்களுக்கு போதிய உணவு, குடிநீர் வசதி இல்லை.



சவக்கிடங்குகளில் அழுகும் உடல்களால் மருத்துவமனைகளில் துர்நாற்றம் வீசுகிறது. இந்நிலையில் இங்கு பீரங்கி வாகனங்களுடன் இஸ்ரேல் இராணுவத்தினர் முற்றுகையிட்டுள்ளனர். இவ்வாறு முகமது ஜாகோட் கூறியுள்ளார்.

# நிலக்கரி சுரங்க தீயில் 26 பேர் மரணம்

வடக்கு சீனாவின் ஷாங்சி மாகாணம் லுலியாங் நகரில் யோங்ஜூ நிலக்கரி நிறுவனத்தின் அலுவலகம், 5 மாடி கட்டடம் ஒன்றில் அமைந்துள்ளது. இந்நிலையில் இந்தக் கட்டடத்தின் இரண்டாவது தளத்தில் நேற்று காலையில் தீப்பற்றியது.



இத்தீ மளமளவென மற்றைய தளங்களுக்கும் பரவியது. தகவல் அறிந்த தீயணைப்பு படையினர் விரைந்து வந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். பேரிடர் மீட்புக் குழுவினர் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். எனினும் தீ விபத்தில் 26 பேர் உயிரிழந்தனர். 60க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக உள்ளூர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். தீ விபத்துக்கான காரணம் தெரியவில்லை. இதுகுறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

## கருணாநிதி நூற்றாண்டு விழா

# ரஜினி, கமலுக்கு நேரில் அழைப்பு



தமிழ்த்திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம் சார்பில் நடைபெற உள்ள 'கலைஞர் 100' விழாவுக்கான அழைப்பிதழ் நடிகர்கள் ரஜினி, கமல் இருவருக்கும் நேரில் வழங்கப்பட்டது.

மறைந்த தி.மு.க தலைவரும் முன்னாள் முதல்வரும் கருணாநிதி நூற்றாண்டு விழா ஆண்டு முழுவதும் தி.மு.க சார்பில் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், கடந்த சில மாதங்களுக்கு முன் நடைபெற்ற தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்க பொதுக்குழுக் கூட்டத்தில் 'கலைஞர் 100 விழா' பிரமாண்டமாக நடத்தப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு அதற்கான ஒப்புதலும் பெறப்பட்டது.

# "இஸ்ரேலின் இனப்படுகொலைக்கு எதிராக ஐ.நா உறுப்பு நாடுகள் விழித்துக்கொள்ள வேண்டும்" பாலஸ்தீன தூதர்

ஹமாஸ் - இஸ்ரேல் போர் நாளுக்கு நாள் நீடித்துவரும் நிலையில், இஸ்ரேலின் இனப்படுகொலைக்கு எதிராக நாடுகள் விழித்துக்கொள்ள வேண்டும் என்று பாலஸ்தீன தூதர் இப்ராஹிம் கிரைஷி தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் - இஸ்ரேல் குறித்து பாலஸ்தீன தூதர் இப்ராஹிம் க்ரைஷி ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா. உறுப்பு நாடுகளின் கூட்டத்தில் பேசினார். அப்போது அவர், "இஸ்ரேலின் இனப்படுகொலைக்கு எதிராக ஐ.நா உறுப்பு நாடுகள் (UN member states) விழித்துக் கொள்ளவேண்டும். நீங்கள் இந்த அறையிலேயே எழுந்திருக்க வேண்டும். இது ஒரு படுகொலை, இது இனப்படுகொலை. நாங்கள் இதை தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். இது மாதிரியான செயல்களைத் தொடரமுடியாது" என்றார்.

காஸாவில் பாதுகாப்பான பகுதிகளே இல்லை என ஐ.நா தெரிவித்துள்ளது.

# பென்சில் சேகரிப்பில் உலக சாதனை

அமெரிக்காவின் அயோவா ( மாநில ஜாஸ்பர் கவுன்டி பகுதியில் உள்ளது கோல்ஃபாக்ஸ் நகரத்தில் இந்நகரத்தில் வசிப்பவர், ஆரோன் பார்த்தலோமி சிறுவயதில் தனது தாத்தாவுடன் கடைகளுக்குச் செல்லும் போது ஆரோனுக்கு பென்சில்கள் மீது ஆர்வம் ஏற்பட்டு அந்த வயது முதலே சேகரிக்கத்தொடங்கினார், ஆரோனுக்கு உலகிலேயே அதிக பென்சில்கள் சேகரித்து கின்னஸ் சாதனை புரிந்தவர் எனும் சான்றிதழ் வழங்கப்பட்டது. ஆரோனிடம் 69,255 பென்சில்கள் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. இதில் 100 வருட பென்சில் ஒன்றும் அடங்கும். எண்ணிக்கையின்படி பழைய சாதனையான 24 ஆயிரத்தை விட எனது சேகரிப்புகள் அதிகம் என அறிந்திருந்தேன். ஆனால், அதை துல்லியமாக எண்ண நீண்ட காலமும் பொறுமையும் தேவைப்பட்டது. நீண்ட பணிக்கு பிறகு இது நடைபெற்றது. கின்னஸ் நிறுவனத்தினர் கடுமையான விதிமுறைகளைப் பின்பற்றினார்கள். என்னால் நம்பமுடியவில்லை.




ஆனால், இறுதியில் அனைத்தும் நல்லபடியாக முடிந்தது என ஆரோன் தனது சாதனை குறித்து அறிவித்துள்ளார்.

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# மழை வெள்ள நிவாரணத் தொகை வருடாந்தம் அதிகரிப்பு

மாரிகாலத்தில் மக்கள் படும் துன்ப துயரங்கள் மிகவும் அதிகமானவை. மழைபெய்யும் போது வெள்ளம் ஏற்படும். சில இடங்கள் வெள்ளத்தால் மூழ்கி விடுகின்றன. அப்போது அவர்களுக்கு நிவாரணம், உதவி என்பன வழங்கப்படுகின்றன. மாரி முடிந்து கோடை காலம் ஆரம்பித்ததும் அதிகாரிகளும் மக்களும் மழை வெள்ளத்தால் அனுபவித்த துன்ப துயரங்களை மறந்து விடுகி றார்கள். அடுத்த மழைக்கு அதே வேலைத் திட்டங்களைத் தொடர்கின்றனர்.

ஒவ்வொரு மழைக்காலத்திலும் இலங்கை முழுவதும் பல பகுதிகள் வெள்ளம், நிலச்சரிவு உள்ளிட்ட இயற்கை பேரழிவுகளால் பாதிக்கப்படுகின்றன. உயிரிழப்பு, வீடு அழிவு, சொத்திழப்பு என்பனவற்றால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். பல மாதங்கள் பெய்த மழையைத் தொடர்ந்து, நீண்ட கால வறட்சி, மழையின்மையால் பயிர்களுக்கு அதிக சேதத்தை ஏற்படுத்துகிறது. பல ஆண்டுகளாக, பேரழிவு மற்றும் அதன் விளைவாக ஏற்படும் சேதங்களின் அளவு அதிகரித்துள்ளது.

சுற்றாடல் அமைச்சினால் நவம்பர் 15 புதன்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வின் போது, வெள்ளம், வறட்சி, மண்சரிவு மற்றும் புயல்கள் போன்றவற்றின் மூலம் ஏற்படும் காலநிலை தூண்டுதலால் ஏற்படும் அனர்த்தங்களுக்குப் பின்னரான வீட்டுவசதி, உட்கட்டமைப்பு, விவசாயப்பயிர்கள் மற்றும் வணிகங்களுக்கு ஏற்பட்ட சேதம் ஆகியவற்றுக்காக இலங்கை வருடாந்தம் 50 பில்லியன் ரூபாவைச் செலவிடுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டில் மட்டும் ஆசியா 81 வானிலை, தட்பவெப்பநிலை மற்றும் நீர் தொடர்பான பேரழிவுகளைப் பதிவுசெய்துள்ளது, இது 50 மில்லியனுக்கும் அதிகமான மக்களை நேரடியாகப் பாதித்தது, இதனால் 36 பில்லியன் டொலர் பொருளாதாரச் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக உலக வானிலை அமைப்பின் ஆசியாவின் காலநிலை அறிக்கை தெரிவிக்கிறது.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) காலநிலை வாக்குறுதியின் இரண்டாம் கட்டத் திட்டத்தின் ஆதரவுடன், பாரிஸ் உடன்படிக்கையின் கட்டமைப்பிற்குள் ஆரம்பத்தில் வாக்குறுதியளிக்கப்பட்ட இலங்கையின் தேசிய ரீதியாக தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளுக்கான (NDCS) அமுலாக்கத் திட்டத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் உரையாற்றினார். COP27 இல் காலநிலை செழிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் இலங்கை தனது காலநிலை நடவடிக்கையை துரிதப்படுத்தியதாக சுற்றாடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

மழை வெள்ளம் ஏற்பட முன்னர் பாதிப்புகளைத் தவிர்ப்பதற்கான முன்னேற்பாடுகள் எவையும் திட்டமிட்டு நடைபெறுவதாகத் தெரியவில்லை. வெள்ளம் செல்லும் வாய்க்கால்களைச் சீரமைத்தல், வெள்ளம் தங்காமல் பாதுகாப்பதற்கான முன்னோட்ட நடவடிக்கை எதுவும் செய்யப்படுவதாகத் தெரியவில்லை. அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டால் வெள்ளப் பாதிப்பில் இருந்து மக்களை மீட்கலாம். இதற்கான விஷேட வேலைத்திட்டம் வடிவமைக்கப்பட வேண்டும்.

# இம்முறை புலமைப்பரிசில் பெறுபேறு வெளியீட்டில் மாற்றம்

2023 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறு நேற்று (16) இரவு வெளியாகி இருந்தன.

www.doenets.lk என்ற இணையத்தளத்திற்குச் சென்று பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியும் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு பரீட்சைக்கு 332,949 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர், அவர்களில் 50,664 பேர் வெட்டுப்புள்ளிகளில் சித்தியடைந்துள்ளனர். புலமைப்பரிசில் பரீட்சையின் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தொடர்பிலான சிங்கள, தமிழ் மொழி மூல வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் கூறுகிறது.

மாணவர்களின் மதிப்பெண்களை மறுபரிசீலனை செய்ய வேண்டியிருந்தால், நவம்பர் 27 முதல் டிசம்பர் 4 வரை இணையவழியில் மேல்முறையீடு செய்ய முடியும் என்று திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

பெறுபேறுகளுடன் District Rank அல்லது Island Rank வெளியிடப்படமாட்டாது என்றும் பரீட்சைத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# கிரிக்கெட் தெரிவுக்குழுவின் தலைவரை விசாரிக்க அமைச்சர் வேண்டுகோள்

இலங்கை கிரிக்கெட் தெரிவுக்குழுவின் தலைவர் பிரமோதய விக்கிரமசிங்க தெரிவித்த கருத்து தொடர்பில், 2019 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க விளையாட்டுடன் தொடர்புடைய தவறுகளைத் தடுக்கும் சட்டத்தின் படி முறையான விசாரணையை மேற்கொள்ளுமாறு விளையாட்டு குற்றங்களைத் தடுக்கும் புலனாய்வுப் பிரிவுக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க அறிவித்துள்ளார்.

கிரிக்கெட் தெரிவுக்குழுவின் தலைவர் பிரமோதய விக்கிரமசிங்க கடந்த 13 ஆம் திகதி ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்து தொடர்பில் அமைச்சர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

பிரமோதய விக்கிரமசிங்க வெளியிட்ட கருத்தின் படி ஆட்ட நிர்ணயம், ஊழல், சட்டவிரோத செயற்பாடு மற்றும் சட்டவிரோத பந்தயம் குறித்து தனக்குத் தெரியும் என தெரிவித்துள்ளமை பாரதூரமானது என விளையாட்டுத்துறை அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மசாலாப் பொருட்கள் ஏற்றுமதிக்கு தர சான்றிதழ் கட்டாயம்

இலங்கையில் மசாலாப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் போது, மசாலா பொருட்கள் மற்றும் அது தொடர்பான பொருட்களை விற்பனை செய்யும் உற்பத்தியாளர்கள் டிசம்பர் மாதம் முதல் தர சான்றிதழைப் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சந்தையில் இலங்கையின் மசாலாப் பொருட்களுக்கு அதிக கிராக்கி காணப்பட்டாலும் இதுவரையில் எமது நாட்டில் மசாலாப் பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கான பணி ஒழுங்குகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான மசாலா ஏற்றுமதியாளர்கள் அந்தப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவிற்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரியவந்துள்ளது. மசாலா பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் துறையினரின் மசாலாப் பொருட்களுக்கான தர உத்தரவாதத் திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்குமாறு அமைச்சர் மஹிந்த அமரவீர மசாலா மற்றும் தொடர்புடைய பொருட்கள் சந்தைப்படுத்தல் சபைக்கு அறிவித்துள்ளார்.

# 2030 இல் அனைவருக்கும் ஆங்கிலம்

மொழி அறிவை தமிழ், சிங்கள மொழிகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்த முடியாது, ஏனைய மொழி அறிவையும் மாணவத் தலைமுறைக்கு வழங்க வேண்டும் என்பதால் 2030 ஆம் ஆண்டாகும்போது அனைவருக்கும் ஆங்கிலம் என்ற திட்டம் நாட்டின் அனைத்து பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதேபோல் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஆங்கில அறிவைப் பெற்றுக்கொடுப்பதற்கு அவசியமான வேலைத்திட்டம் தயாரிக்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று (16) நடைபெற்ற, டீ.எஸ்.சேனநாயக்க கல்லூரியின் ஸ்தாபகரும் தலைசிறந்த கல்வியாளருமான மறைந்த ஆர்.ஐ.டி.அலஸின் 10 ஆவது நினைவு தின நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பணம் இல்லை என்ற காரணத்தால் எந்தவொரு பிள்ளைக்கும் உயர்கல்வி வாய்ப்புக் கிடைக்காமல் போய்விடக்கூடாதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி சொத்துக்களை விற்று பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பும் யுகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# கலை இலக்கியப் பெருவிழா

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட காரியாலயத்துடன், அக்கரைப்பற்று கலை இலக்கியப் பேரவை இணைந்து நடத்தும் கலை இலக்கியப் பெருவிழா நாளை சனிக்கிழமை (18) மாலை 4.00 மணிக்கு அக்கரைப்பற்று அதாஉல்லா அரங்கில் அக்கரைப்பற்று கலை இலக்கியப் பேரவையின் தலைவர் கலாபூஷணம் மீரா எஸ். இஸ்ஸதீன் தலைமையில் நடைபெறும். இந்த கலை இலக்கியப் பெருவிழாவுக்கு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப்பணிப்பாளர் எஸ்.நவநீதன் அதிதியாக கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சார், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.ஏ.ஷாபிர், அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் ஏ.ரீ.எம்.ராபி, உதவிப் பிரதேச செயலாளர்களான சட்டத்தரணி நஜீஹா முஸாபிர், வை.ராசித், அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். றஹ்மத் துள்ளா, அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக், அக்கரைப்பற்று பிரதேச சபை செயலாளர் ஐ.எம்.இர்பான் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

## அகதியாக சென்று நாடு திரும்பியவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

தமிழ்நாட்டில் அகதிகளாக தஞ்சமடைந்து 33 ஆண்டுகளின் பின்னர் சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக தாயகம் திரும்பிய வடமராட்சி கிழக்கு, குடத்தனையைச் சேர்ந்த மூவரின் விளக்கமறியலை பருத்தித்துறை நீதிவான் கிரிசாந்தன் பொன்னுத்துரை நீடித்து உத்தரவிட்டுள்ளார். போர் காரணமாக குடத்தனை வடக்கைச்சேர்ந்த சின்னராஜா நாகேஸ்வரி (வயது58), அவரது மகளான சின்னராஜா சுதர்சினி (வயது42) மகனான சின்ன ராஜா சுதாகரன் (வயது 39) ஆகியோர் 1990 ஆம் ஆண்டு தமிழ்நாட்டுக்குச் சென்றிருந்தனர். அவர்கள் படகு மூலமாக தாயகம் திரும்பி குடத்தனை பகுதியில் உள்ள உறவினர் வீடு ஒன்றில் தங்கி இருந்தபோது பருத்தித்துறை பொலிஸாரால் கடந்தமாதம் 10 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

## சர்வதேச மாற்று திறனாளிகள் தினம்

சர்வதேச மாற்று திறனாளிகள் தினம்நேற்று கண்டாவளை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட



செயலக உதவி மாவட்ட செயலாளர் க.சத்தியஜீவிதா, சமூக சேவை உத்தியோகத்தர்கள், மாற்றுத் திறனாளிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். மாற்றுத் திறனாளிகளிடையே நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## கால்நடைகளை கொலை செய்த இருவர் துப்பாக்கியுடன் கைது

மட்டக்களப்பு மேச்சல் தரை மாதவனை மயிலத்தமடு பகுதியில் கால்நடைகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி வந்த சட்டவிரோத குடியேற்ற வாசிகள் இருவரை நேற்று வியாழக்கிழமை (16) கைது செய்த வாழைச்சேனைப் பொலிஸார், அவர்களிடமிருந்து உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கியொன்றை மீட்டுள்ளனர்.

மேச்சல்தரைப் பகுதியில் தொடர்ச்சியாக பண்ணையாளர்களின் கால்நடைகள் மீது இனம் தெரியாதோர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு கால்நடைகளை கொன்றுவந்துள்ளதுடன் கால்நடைகளின் வாயை குறிவைத்து பன்றிவெடிகளை வைத்து தாக்குதல் நடாத்தப்பட்டு வந்துள்ளது

கால்நடை வளர்ப்பு பண்ணையாளர்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தனர். வாழைச்சேனை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று மேச்சல்தரைப் பகுதியில் துப்பாகியுடன் உலாவித் திரிந்த சட்டவிரோத குடியேற்றவாசிகள் இருவரை பொலிஸார் மடக்கிப்பிடித்து கைது செய்தனர். இதில் கைது செய்யப்பட்டவர்களை வாழைச்சேனை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் ஆஜராக உத்தரவு

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ வெளிநாட்டில் இருந்து இலங்கை திரும்பும்



போது விமான நிலையத்தில் வைத்து கைது செய்ய வேண்டாம் என தெரிவித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது. நாட்டுக்கு அவர் வந்த பின்னர் 48 மணி நேரத்திற்குள் குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தின் டிஜிட்டல் தடயவியல் பிரிவில் முன்னிலையாகி போதகர் வாக்குமூலம் அளிக்க வேண்டும் என நீதிமன்ற உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 2519 தாதியர் இன்று நியமனம்

இலங்கையில் நோயாளர் பராமரிப்பு சேவைகளை வலுப்படுத்தும் வகையில் 2,519 புதிய தாதியர்களுக்கான நியமனக்கடிதங்களை இன்று(17) பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் வழங்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. 2018 ஆம் ஆண்டு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மாணவர் தாதியர் குழுவின் கீழ், 2020 ஜனவரியில் பயிற்சியை ஆரம்பித்து, பாடநெறியை வெற்றிகரமாக முடித்த மாணவர் தாதியர்களுக்கு இதன்போது நியமனம் வழங்கப்படவுள்ளது. தற்போது நாடளாவிய ரீதியில் 42,000 தாதியர்கள் பணிபுரிந்து வருவதாகவும்



இந்த ஆட்சேர்ப்பின் மூலம் நாட்டில் தாதியர்களின் எண்ணிக்கை 45,000ஐ தாண்டும் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## கடலில் மிதந்து வந்த சடலம்

புத்தளம் - முள்ளிபுரம் பூவரசன் குடா சிறுகடல் பகுதியிலிருந்து இரண்டு கிலோமீற்றர் தொலைவில் மிதந்த நிலையில் சடலம் நேற்று காலை மீட்கப்பட்டுள்ளது.

சிறுகடலில் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் சிலர், கடலுக்குள் சடலம் ஒன்று கிடப்பதை அவதானித்து அதுபற்றி அப்பகுதியிலுள்ள கிராம சேவகருக்கு தெரியப்படுத்தியுள்ளனர். புத்தளம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு முதற்கட்ட விசாரணைகளை முன்னெடுத்தனர்.

## பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதவான் உத்தரவு

ஏறாவூர், சந்திவெளி, கரடியனாறு பொலிஸ் பிரிவுகளில் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யும் சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றவியல் கோவை சட்டத்தின் கீழ் பொலிஸார் குற்றவியல் சட்டத்தின் கீழ் வழக்கு தொடராத காரணத்தால் குற்றவாளிகள் சட்டத்தில் இருந்து தப்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது, எனவே பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதவானும் மேலதிக நீதவானுமாகிய அன்வர் சதாக் புதன்கிழமை (15) கட்டளை பிறப்பித்துள்ளார்.

நீதிமன்றில் ஏறாவூர், சந்திவெளி, கரடியனாறு பொலிஸ் நிலையங்களினால் திருட்டுசம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்ட 3 பேருடைய வழக்கு விசாரணை நேற்றைய தினம் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் மேலதிக நீதவான் முன்னிலையில் விசாரணைக்காக எடுக்கப்பட்டது.

இதன் போது குறித்த வழக்கில் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட 3 பேருக்கும் எதிராக சரியான முறையில் பொலிஸார் வழக்கு தொடராத காரணத்தால் அவர்கள் குற்றவாளிகள் என நிரூபிக்கப்படாததால் அவர்களை வழக்கில் இருந்து விடுவித்து விடுதலை செய்ததுடன் குறித்த நபர்களுக்கு எதிராக வழக்கு தொடர்ந்த பொலிஸ் நிலையங்களின் பொலிஸார் குறித்த நபர்கள் பல திருட்டுச்சம்பவங்களில் தொடர்புடையவர்கள் என தெரிந்தும் அவர்களுக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் கீழ் சரியான பிரிவுகளில் வழக்கு தொடரவில்லை

இதன் காரணமாக பல குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் வெளியில் சென்று மீண்டும் குற்றம் செய்கின்றனர்.

# அவுஸ்திரேலியாவை மிரட்டிய மில்லர்
# இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலியா




ஈடன்கார்டனில் நடைபெற்ற பரபரப்பான இரண்டாவது அரை இறுதிப் போட்டியில் தென் ஆபிரிக்காவை வீழ்த்திய அவுஸ்திரேலிய 8 ஆவது முறையாக இறுதிப்போட்டியில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென் ஆபிரிக்கா 49.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 212 ஓட்டங்கள் எடுத்தது. மில்லர் 101 ஓட்டங்கள் எடுத்தார். 213 எனும் இலகுவான இலக்கை எதிர்கொண்டு களம் இறங்கிய அவுஸ்திரேலியா, 42.7 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 215 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

கப்டன் பவுமா வழக்கம் போல ஸ்டார்க் வேகத்தில் டக் அவுட்டாகி பெரிய பின்னடைவை ஏற்படுத்தினார். ஆனால், அதிரடியாக விளையாடிக் காப்பாற்றுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட குயிண்டன் டீ காக் (3) வெளியேற அடுத்ததாக வந்த ஐடன் மார்க்ரம் 10 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். நங்கூரமாக விளையாடக்கூடிய வேன் டெர் டுஷன் 6 ஓட்டங்களில் வெளியேறியதால் 11.5 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த தென் ஆபிரிக்கா 24 ஓட்டங்கள் எடுத்துத் தடுமாறியது. ஆனாலும் டேவிட் மில்லர், ஹென்றிச் கிளாஸன் ஆகியோர் நங்கூரமாக விளையாடி அவுஸ்திரேலியாவுக்கு சவாலைக்கொடுத்தனர். 5 ஆவது விக்கெட்டுக்கு 95 ஓட்டங்கள் அடித்தபோது கிளாஸினை 47 ஓட்டங்களில் அவுட்டாக்கிய டிராவிஸ் ஹெட் அடுத்ததாக வந்த மார்க்கோ யான்சனை கோல்டன் டக் அவுட்டாக்கினார்.

6 விக்கெட்களையிழந்து 119 ஓட்டங்கள் எடுத்து மீண்டும் தடுமாறிய தென் ஆபிரிக்காவுக்கு டேவிட் மில்லர் தொடர்ந்து அரை சதம் கடந்து அசத்திய நிலையில் எதிர்ப்புறம் வந்த ஜெரால்டு கோட்சி 7 ஆவது விக்கெட்டுக்கு 53 ஓட்டங்கள் பார்ட்னர்ஷிப் அமைத்து 19 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஆனாலும் மறுபுறம் தொடர்ந்து அவுஸ்திரேலியாவுக்கு சவாலைக் கொடுத்த மில்லர் பவுண்டரி 5 சிக்ஸருடன் சதமடித்து 101 (116) ஓட்டங்கள் ஆட்டமிழந்தார். ஐ.சி.சி உலகக்கிண்ண வரலாற்றில் நாக் அவுட் போட்டியில் சதமடித்த முதல் தென் ஆபிரிக்க வீரர் என்ற மாபெரும் வரலாற்றுச் சாதனையை மில்லர் படைத்தார்.

ஜக் கலிஸ், ஏ.பி.டீ.வில்லியர்ஸ் உட்பட எந்த தென் ஆப்பிரிக்க வீரரும் உலகக்கிண்ண நாக் அவுட் போட்டியில் சதமடித்ததில்லை. உலகக் கிண்ண வரலாற்றில் நாக் அவுட் போட்டியில் 6 ஆவது இடத்தில் களமிறங்கி சதமடித்த முதல் வீரர் என்ற உலக சாதனையும் அவர் படைத்தார். அவுஸ்திரேலியா சார்பில் மிட்சேல் ஸ்டார்க் 3, ஜோஸ் ஹேசல்வுட் 2, பட் கமின்ஸ் 3, டிராவிஸ் ஹெட் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

லபுசேன் (1) மேக்ஸ்வெல் (18) ஆகியோரை ஷம்ஷி வெளியேற்ற தென் ஆபிரிக்காவின் கை ஓங்கியது. ஸ்மித், இங்லிஷ் கூட்டணி சீராக ஓட்டங்கள் சேர்க்க அவுஸ்திரேலியா அணி விக்கெட்டுகளை இழக்காமல் 10 ஓவர்கள் விளையாடியது.

அதன் பின்னர் வந்த ஸ்டார்க் இங்லிஷ் கூட்டணி வெற்றியை நோக்கி முன்னேற்றும் வேலைகளை சிறப்பா கச் செய்தது. 28 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் இங்லிஷ் தனது விக்கெட்டினையிழக்க, போட்டி பரபரப்பானது. இறுதிக் கட்டத்தில் அவுஸ்திரேலியா அணி 47.2 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 215 ஓட்டங்கள் சேர்த்து 3 விக்கெட்டுகள் வித்தியா சத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றி மூலம் அவுஸ்திரேலியா அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. இதன் மூலம் அவுஸ்திரேலியா அணி 8 ஆவது முறையாக உலகக்கிண்ண இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. இதற்கு முன்னர் அவுஸ்திரேலியா 1975, 1987, 1996, 1999, 2003, 2007, 2015 மற்றும் 2023 என மொத்தம் 8 முறை இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. 19 ஆம் திகதி அதாவது ஞாயிற்றுக்கிழமை அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் இந்தியாவை அவுஸ்திரேலியா எதிர்கொள்ளவுள்ளது.




இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 17.11.2023 அன்று வெளியிடப்பட்டது.